# சென்னைச் செந்தமிழ் மன்றம்


பொது அறக்கட்டளை (28/2024)

உலக சாதனை படைத்த

# நன்னூல்

## பன்னாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகள்

(தொகுதி 2 சொல்லதிகாரம்)



பதிப்பாசிரியர்

முனைவர் ஆ. இரமேஷ்

# சென்னைச் செந்தமிழ் மன்றம்

## பொது அறக்கட்டளை (28/2024)

### உலக சாதனை படைத்த

# நன்னூல்

# பன்னாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகள்

(தொகுதி 2 – சொல்லதிகாரம்)


பதிப்பாசிரியர்

முனைவர் **ஆ. இரமேஷ்**

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை

துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி

அரும்பாக்கம், சென்னை – 600 106.



**ஜோதி பதிப்பகம்**

நெ. 2/1067, 11 ஆவது தெரு, 2 ஆவது குறுக்குத் தெரு

முகப்பேர் மேற்கு, சென்னை – 600 037.

## நூல் விவரம்

தலைப்பு : **நன்னூல் - பன்னாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகள்**
(தொகுதி 2 – சொல்லதிகாரம்)

பதிப்பாசிரியர் : **முனைவர் ஆ. இரமேஷ்**

உரிமை : © பதிப்பாசிரியருக்கு

பொருண்மை : இலக்கணம்

முதற்பதிப்பு : பிப்ரவரி 2025

அளவு : டபுள்கிரௌன்

வெளியீடு : **ஜோதி பதிப்பகம்**
எண் : 2/1067, 11 ஆவது தெரு, 2 ஆவது குறுக்குத் தெரு
முகப்பேர் மேற்கு, சென்னை – 600 037.
கைபேசி : 9940190616

ISBN : 978-81-983257-8-5 Rs. : 800/- Pages : 400

Title : **NANNOOL - INTERNATIONAL SEMINAR ARTICLES**
(Volume 2 - Chollathigaram)

Editor : **Dr. A. Ramesh**

Copy Right : © Editor

Subject : Grammar

First Edition : February 2025

Book Size : D/G

Published by : **JOTHI PUBLICATIONS**
2/1067, 11th Street, 2nd Cross Street
Mugappair West, Chennai - 600 037.

Mobile : 9940190616

94. நன்னூல் மூலமும் கூழங்கைத் தம்பிரான் காண்டிகை உரையும்
**முனைவர் முகிலை இராசபாண்டியன்** .................... 351

95. நன்னூல் – தேவிரா உரை
**முனைவர் த. அருள் பத்மராசன்** .................... 358

96. நன்னூல் சொல்லதிகாரம் : சமகாலத்து உரைகள் –
திருஞானசம்பந்தம் உரை
**சி. சிவகாமிசுந்தரி** .................... 363

97. நன்னூல் பெயர்ச்சொல்
**மதிப்புறு முனைவர் ம. ஜோதி மீனாக்ஷி** .................... 369

98. நன்னூல் காட்டும் சிங்கமுகநோக்கு
**முனைவர் ம. சித்ரகலா** .................... 378

99. வினைச்சொல் – வினைத் தொகை ஒருபார்வை
**முனைவர் குமரிச்செழியன்** .................... 387

100. நன்னூல் புலப்படுத்தும் ஆசிரியர் மாணவர் உறவு
**திரு. சு. சிவப்பிரகாஷ்** .................... 396

# நன்னூல் காட்டும் சிங்கமுகநோக்கு

98

**முனைவர் ம. சித்ரகலா**
உதவிப்பேராசிரியர்
என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.

**ஆய்வுச்சுருக்கம்**

நன்னூல் காட்டும் சிங்கமுகநோக்கு என்னும் தலைப்பிலான ஆய்வுக்கட்டுரையில் தமிழ்மொழியில் சொல், சொற்றொடர்களை அமைக்கவும், எச்சம் பற்றியும், தமிழ்மொழியை எழுதும்போதோ பேசும் போதோ இலக்கணப்பிழையின்றி எழுதவும் பேசவும் கற்றுக் கொடுக்கும் வகையில் வழு, வழாநிலை, வழுவமைதி ஆகியவற்றை அறிந்து கொள்ளவும், அறுவகை வினாக்கள், எண்வகை விடைகள் ஆகியவற்றின் தன்மையையும் அடுக்குத்தொடர் ஆகியவைகள் பயன்படுத்தப்படும் இடங்கள் குறித்தும் ஆய்வதே இக்கட்டுரையில் ஆய்வுச்சுருக்கமாக அமைகின்றது.

**முன்னுரை**

தமிழ் இலக்கண நூலான நன்னூலை எழுதியவர் பவணந்தி முனிவர். இவர் 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் என்றும் மூன்றாம் குலோத்துங்கச் சோழன் காலத்தவர் என்றும் வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இவர் மூன்றாம் குலோத்துங்கச் சோழனின் ஆட்சி காலத்தில் சிற்றரசனாக விளங்கிய சீயகங்கனால் ஆதரிக்கப்பட்டதோடு அவரின் தூண்டுதலின் காரணமாக நன்னூல் இயற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியரின் காலம் கி.மு. 5320 என்று கா. வெள்ளைவாரணரும் கி.பி. 5ஆம் நுற்றாண்டு என வையாபுரிப்பிள்ளையும் கருதுகின்றனர். மேலும் தொல்காப்பியரின் காலத்தைக் கி.மு. 2 ஆம் நூற்றாண்டு கி.பி. 2 ஆம் நூற்றாண்டு என இரு மாறுபட்ட கருத்துகளைப் பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி கூறுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. நன்னூல் 12 நூற்றாண்டு எனில் தொல்காப்பியத்திற்கும் நன்னூலிற்குமான கால இடைவெளி 1800 ஆண்டுகள் எனலாம். ஆக நன்னூலின் முதல் நூல் தொல்காப்பியர் எழுதிய தொல்காப்பியம். நன்னூல், தொல்காப்பியத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் தோன்றிய வழிநூல் என்பது குறிப்பிடத்தக்கது.

தொல்காப்பியர் தொல்காப்பியத்தில் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்று அதிகாரங்களும் ஒரு அதிகாரத்திற்கு ஒன்பது இயல்களுமாக மொத்தம் 27 இயல்களாகப் பகுத்துக் குறிப்பிட்டுள்ளார். நன்னூலார் எழுத்து, சொல் இரண்டு அதிகாரங்காளாகப் பிரித்து ஒவ்வொரு அதிகாரத்திற்கும் ஐந்து இயல்களாக மொத்தம் பத்து இயல்களாகப் பகுத்துக் கூறியுள்ளார். மேலும் சில நூட்பாக்களில்

தொல்காப்பியர் தொகுத்துக் கூறியதை நன்னூலார் விரித்தும், தொல்காப்பியர் விரித்துக் கூறியதை நன்னூலார் தொகுத்தும் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதனை,

| எழுத்திகாரம் | | சொல்லதிகாரம் | |
|---|---|---|---|
| தொல்காப்பியம் | நன்னூல் | தொல்காப்பியம் | நன்னூல் |
| நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல் | எழுத்தியல் | பெயரியல், விளிமரபு, வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல் | பெயரியல் |
| தொகைமரபு, புணரியல், உயிர் மயங்கியல், | உயிரீற்றுப் புணரியல் | வினையியல் | வினையியல் |
| புள்ளி மயங்கியல் குற்றியலுகரப் புணரியல் | மெய்யீற்றுப் புணரியல் | இடையியல் | இடையியல் |
| உருபியல் | உருபு புணரியல் | உரியியல் | உரியியல் |
| | புதிதாக நன்னூலார் பதவியல் என்ற இயல் கொண்டு வந்துள்ளார் | கிளவியாக்கம், எச்சவியல் | பொதுவியல் |

எனப் பாகுபடுத்திப் பார்க்கலாம்.

**பொதுவியல்**

சொல்லதிகாரத்தில் இயல்களாகப் பெயரியல், வினையியல், பொதுவியல், இடையியல், உரியியல் என ஐந்து இயல்கள் உள்ளன. ஐந்து இயல்களில் பெயருக்கும் வினைக்கும் பின்னரும் இடைக்கும் உரிக்கும்முன்னரும் அதாவது இரண்டு இரண்டு இயல்களுக்கு நடுவில் பொதுத்தன்மையோடு அமைக்கப்பட்ட இயல் பொதுவியல் எனலாம். சொல்லதிகாரத்தில் நடுவுநிலையுடன் நயமான இயலாகப் பொதுவியல் அமைந்துள்ளது. ஏன் பொதுவியல் நடுவு நிலையாக வைக்கப்பட்டது என்றால் சொல்லதிகாரத்தில் பொதுவியலுக்கு முன்னே அமைந்துள்ள பெயரியல், வினையியலையும் இறுதியில் அமைந்துள்ள இடையியல், உரியியலையும் நடுநிலையாகக் கொண்டு முன்னர் உள்ள பெயரியலிலும், வினையியலிலும் சொல்லப்படாத செய்திகளையும் பின்னர் உள்ள இடையியல் உரியியலில் சொல்லப்படாத செய்திகளையும் தொகுத்துச் சொல்லும் அமைப்பில் இந்தப் பொதுவியல் அமைந்துள்ளது என உரையாசிரியர்கள் கருதுகின்றனர். ஆதலால் இவ்வியலை உரையாசிரியர்கள் சிங்கமுகநோக்கு (அரிமா நோக்கு) உடையது என்று குறிப்பிடுகின்றனர். சிங்கம் நடந்து செல்லும்போது கம்பீரமாக இருபக்கமும் பார்த்துச் செல்லுவதுபோல இவ்வியல் முன் இரு இயல்களையும் பின் இரு இயல்களையும் பார்த்துச் செல்வதோடு அதில் சொல்லப்படாத செய்திகளைப் பொதுத்தன்மையுடன் எடுத்தியம்புவதால்

இவ்வியல் பொதுவியல் என்பது பொருத்தமானதே எனலாம். இவ்வியலில் மொத்தம் 68 நூற்பாக்கள் (352 நூற்பா முதல் 419 நூற்பா வரை) இடம்பெற்றுள்ளன.

**நூற்பாக்களைத் தொகுத்தும் விரித்தும் கூறல்**

தொல்காப்பியர் கிளவியாக்கத்திலும், எச்சவியலிலும் சொன்ன செய்திகளை நன்னூலார் பொதுவியலில் குறிப்பிட்டுள்ளதோடு, சில நூற்பாவிலும் சில மாற்றங்கள் செய்துள்ளார். தொல்காப்பியர் விரித்துக் கூறியதை நன்னூலார் தொகுத்துக் கூறுகிறார். சான்றாக,

**"ஈ, தா, கொடு எனக் கிளக்கும் மூன்றும்**
**இரவின் கிளவி ஆகு இடன் உடைய"** – (தொல். 929)

அவற்றுள்

**'ஈ என் கிளவி இழிந்தோன் கூற்றே'** – (தொல். 930)
**'தா என் கிளவி ஒப்போன் கூற்றே'** – (தொல். 931)
**'கொடு என் கிளவி உயர்ந்தோன் கூற்றே'**– (தொல்.932)
**'ஈ தா கொடு எனும் மூன்று உம் முறை**
**இழிந்தோன் ஒப்போன் மிக்கோன் இரப்பு உரை'** (நன்னூல் நூற்பா : 107)

இவ்வாறு தொல்காப்பியர் மூன்று நூற்பாக்களில் விரித்துச் சொன்னதை நன்னூலார் ஒரே நூற்பாவில் தொகுத்துக் கூறியுள்ளார். இதுபோலவே தொல்காப்பியர் தொகுத்துக் கூறியதை நன்னூலார் விரித்தும் கூறியுள்ளார்.

"அடை சினை முதல் என முறை மூன்றும் மயங்காமை நடை பெற்று இயலும் வண்ணச் சினைச் சொல் (தொல். 511)

**பொருள் முதல் ஆறு ஆம் அடை சேர் மொழி இனம்**
**உள்ள உம் இல்ல உம் ஆம் இரு வழக்கின் உம்** – (நன்னூல், நூற்பா : 401)
**அடை மொழி இனம் அல்லது உம் தரும் ஆண்டு உறின்**
– (நன்னூல், நூற்பா : 402)

**அடை சினை முதல் முறை அடைதல் உம் ஈர் அடை**
**முதல் ஓடு ஆதல் உம் வழக்கு இயல் ஈர் அடை**
**சினை ஓடு செறிதல் உம் மயங்கல் உம் செய்யுள்கு** – (நன்னூல், நூற்பா : 403)

என விரித்துள்ளார் பவணந்தி முனிவர். இவ்வாறு தொல்காப்பியர் சொன்னதை அப்படியே சொல்லாமல் சில மாற்றங்கள் செய்தும் எளிமைப்படுத்தியும் நூலாக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**எச்சம்**

எச்சம் என்பதைத் தொல்காப்பியர் எஞ்சுபொருட்கிளவி என்ற குறியீட்டுச் சொல்லால் குறிப்பிடுகின்றார். தமிழ் மொழியில் சொல்லோ சொல்லின் பொருளோ முழுமை பெறாமல் குறைந்து நிற்பதை எச்சம் என்னும் சொல்லால் தமிழ் இலக்கணம் குறிப்பிடுகிறது. பொருள் எஞ்சிய, அதாவது, சொல்லாமற் குறைபட்ட, பொருளைக் குறிக்கும் சொல்லே எச்சம் எனப்படுகிறது. எச்சம் என்பது பெயர்ச்சொல்லையோ வினைச்சொல்லையோ கொண்டு முடிவதாய் அமையும். காலம் காட்டும் செயலை உணர்த்துவதாய் அமையும். திணை, பால், எண், இடம் உணர்த்தாது. வினைப்பகுதியைக் கொண்டிருக்கும், எச்சத்திற்கு உரிய விகுதியைப் பெற்றிருக்கும் வகையில் அமைந்திருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

எச்சம் என்பதற்கு மறுபிறவி, பிறப்பிலே வரும் குறை, சந்ததி, மகப்பேறு, புகழ் என்ற பொருள்களைத் தமிழகராதி தருகிறது. எச்சம் என்ற சொல் சந்ததி என்ற பொருளில் "தான் இறந்தொழிய எஞ்சி நிற்பது சந்ததி ஆதலால் சந்ததி எச்சம் எனப்பட்டது" (திருக். தண்டி. 112). இவ்வாறே எச்சம் என்ற சொல் புகழ் என்ற பொருளில் விளக்கப்படுவதை, "தம்மால் ஆக்கப்பட்டுத் தமக்குப் பின் தம்பெயர் விளக்கி நிற்கும் புகழும்" எச்சம் ஆகும். (திருக்குறள். தண்டி. 238). தனக்கு உதவியவருக்கு உதவாமால் இருந்த வினை மறுபிறப்பும் எச்சமாக நிற்கும் என்பதைச் சங்க இலக்கியத்தில்,

**"ஒற்கத்துள் உதவியார்க்கு உதவாதான் மற்று அவன்**
**எச்சத்துள் ஆயினும் அஃது எறியாது விடாதே காண்"** (கலி. 149. 6, 7)

எடுத்தியம்பப்படுகிறது. புறநானூற்றில்,

**"சிறப்பு இல் சிதடும் உறுப்பு இல் பிண்டமும்**
**கூனும் குறளும் ஊமும் செவிடும்**
**மாவும் மருளும் உளப்பட வாழ்நர்க்கு**
**எண் பேர் எச்சம் என்று இவை எல்லாம்"** (புறம். 28. 1 – 4)

என்று மக்கட்பிறப்பிற்குரிய எண்வகை எச்சமாகச் சுட்டுகின்றது. தொல்காப்பியர் சொல்லதிகாரத்தில் எட்டு இயல்களில் சொல்லப்படாத செய்தி எஞ்சி இருப்பதை எச்சவியலாகவே குறிப்பிடுவதை,

**"எச்சம் எனப்படுப இருவகை என்ப**
**சொல் லொடும், பொருளொடும் முடிவுகொள் இயற்கை**
**புல்லிய கிளவி எச்சம் ஆகும்"** (தொல்., பொருள்., 198)

என்கிறார். ஆக எச்சம் என்பது எஞ்சி இருப்பது என்பது திண்ணம். சொல்லில் பொருள் எஞ்சி நின்றால் அதை எச்சமாக இலக்கண ஆசிரியர்கள் கூறுவதைப்போல வாழ்ந்த வாழ்க்கையில் புகழோ, பழியோ எஞ்சி நின்றாலும் அது தன் சந்ததிக்கு எச்சமாக சென்றடையும் இலக்கியங்களும் பொருள் கொண்டுள்ளதன்வழி எச்சம் என்பது எஞ்சி இருத்தலே என்பது ஆராயப்பட்டுள்ளது. எச்சங்கள் பத்துவகை என்பதைத் தொல்காப்பியர்,

### எச்சம்

எச்சம் என்பதைத் தொல்காப்பியர் எஞ்சுபொருட்கிளவி என்ற குறியீட்டுச் சொல்லால் குறிப்பிடுகின்றார். தமிழ் மொழியில் சொல்லோ சொல்லின் பொருளோ முழுமை பெறாமல் குறைந்து நிற்பதை எச்சம் என்னும் சொல்லால் தமிழ் இலக்கணம் குறிப்பிடுகிறது.பொருள் எஞ்சிய, அதாவது, சொல்லாமற் குறைபட்ட, பொருளைக் குறிக்கும் சொல்லே எச்சம் எனப்படுகிறது. எச்சம் என்பது பெயர்ச்சொல்லையோ வினைச்சொல்லையோ கொண்டு முடிவதாய் அமையும். காலம் காட்டும் செயலை உணர்த்துவதாய் அமையும். திணை, பால், எண், இடம் உணர்த்தாது. வினைப்பகுதியைக் கொண்டிருக்கும், எச்சத்திற்கு உரிய விகுதியைப் பெற்றிருக்கும் வகையில் அமைந்திருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

எச்சம் என்பதற்கு மறுபிறவி, பிறப்பிலே வரும் குறை, சந்ததி, மகப்பேறு, புகழ் என்ற பொருள்களைத் தமிழகராதி தருகிறது. எச்சம் என்ற சொல் சந்ததி என்ற பொருளில் "தான் இறந்தொழிய எஞ்சி நிற்பது சந்ததி ஆதலால் சந்ததி எச்சம் எனப்பட்டது" (திருக். தண்டி. 112). இவ்வாறே எச்சம் என்ற சொல் புகழ் என்ற பொருளில் விளக்கப்படுவதை, "தம்மால் ஆக்கப்பட்டுத் தமக்குப் பின் தம்பெயர் விளக்கி நிற்கும் புகழும்" எச்சம் ஆகும். (திருக்குறள். தண்டி. 238). தனக்கு உதவியவருக்கு உதவாமால் இருந்த வினை மறுபிறப்பும் எச்சமாக நிற்கும் என்பதைச் சங்க இலக்கியத்தில்,

**"ஒற்கத்துள் உதவியார்க்கு உதவாதான் மற்று அவன்**
**எச்சத்துள் ஆயினும் அஃது எறியாது விடாதே காண்"** [கலி. 149. 6, 7]

எடுத்தியம்பப்படுகிறது. புறநானூற்றில்,

**"சிறப்பு இல் சிதடும் உறுப்பு இல் பிண்டமும்**
**கூனும் குறளும் ஊமும் செவிடும்**
**மாவும் மருளும் உளப்பட வாழ்நர்க்கு**
**எண் பேர் எச்சம் என்று இவை எல்லாம்"** [புறம். 28. 1 – 4]

என்று மக்கட்பிறப்பிற்குரிய எண்வகை எச்சமாகச் சுட்டுகின்றது. தொல்காப்பியர் சொல்லதிகாரத்தில் எட்டு இயல்களில் சொல்லப்படாத செய்தி எஞ்சி இருப்பதை எச்சவியலாகவே குறிப்பிடுவதை,

**"எச்சம் எனப்படுப இருவகை என்ப**
**சொல் லொடும், பொருளொடும் முடிவுகொள் இயற்கை**
**புல்லிய கிளவி எச்சம் ஆகும்"** [தொல்., பொருள்., 198]

என்கிறார். ஆக எச்சம் என்பது எஞ்சி இருப்பது என்பது திண்ணம். சொல்லில் பொருள் எஞ்சி நின்றால் அதை எச்சமாக இலக்கண ஆசிரியர்கள் கூறுவதைப்போல வாழ்ந்த வாழ்க்கையில் புகழோ, பழியோ எஞ்சி நின்றாலும் அது தன் சந்ததிக்கு எச்சமாக சென்றடையும் இலக்கியங்களும் பொருள் கொண்டுள்ளதன்வழி எச்சம் என்பது எஞ்சி இருத்தலே என்பது ஆராயப்பட்டுள்ளது. எச்சங்கள் பத்துவகை என்பதைத் தொல்காப்பியர்,

"பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை
எதிர்மறை உம்மை எனவே சொல்லே
குறிப்பே இசையே ஆயீரைந்தும்
நெறிப்படத்தோன்றும் எஞ்சுபொருட்கிளவி" [தொல். எச்ச. நூற். 34]

"பெயர் வினை உம் சொல் பிரிப்பு என ஒழியிசை எதிர்மறை இறை எனும் சொல் ஒழிபு ஒன்பதும் குறிப்பும் தத்தம் எச்சம் கொள்ளும்" (நன். 360)

இவற்றில் சொல்லெச்சங்கள் ஒன்பது, குறிப்பெச்சம் ஒன்றாகும். "இப்பத்துள் பெயரெச்சம், வினையெச்சம், எனவென் எச்சம் என்னும் மூன்றில் மட்டுமே எச்சச் சொற்கள் தொடர்களில் வெளிப்பட்டு நிற்கும். பிறவற்றில் எச்சச் சொற்கள் வருவித்து உரைக்கப்படும்" என்பதும் இவ்வெச்சச்சொற்கள் குறிப்பு, தெரிநிலை ஆகிய இருவிடங்களிலும் வரும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**தொகைநிலைத்தொடர்**

ஒரு எழுத்தோ, பல எழுத்துகளோ சேர்ந்து வந்து பொருள் தருவது சொல் என்கிறோம். சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடர்ந்து வந்து பொருள் தருவது சொற்தொடர் என்கிறோம்.

தொகை என்னும் சொல் கூட்டுத்தொகை, பெருக்குத்தொகை, என்பனவற்றில் கொள்ளப்படும். தொல்காப்பியத்தில் தொகைச்சொல் (தொ.2-285) என்றும் தொகைநிலை (தொல். 3-69.12) என்றும் தொகைமொழி (1-224) என்றும் குறிப்பிடப்படுகிறது. திருக்குறளில் தொகை என்னும் சொல் இந்தப் பொருளில் வழங்கப்படுவதை,

**தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக**
**நல்குரவுலு என்னும் நசை**
– [திரு. 1043]

குறிப்பிடுகிறது. தொகை என்னும் சொல்லிற்குத் தொகுத்து வருதல் மறைந்து வருதல் என்பது பொருள். இரண்டு சொற்கள் ஒரு சொல்லாகத் தொகுக்கப்பட்டிருக்கும் தொடரைத் தொகைநிலைத் தொடர் என்று குறிப்பிடுகிறோம். இதனை,

**"ஈற்றுநின் றியலுந் தொகைவயிற்பிரிந்தே"** – [தொல். சொல். 78 இளம்.]
**"எல்லாத் தொகையு மொருசொன்னடைய"** – [தொல். சொல். 420]

என்கிறது. ஒரு எழுத்தோ, பல எழுத்துகளோ சேர்ந்து வந்து பொருள் தருவது சொல் என்கிறோம். சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடர்ந்து வந்து பொருள் தருவது சொற்தொடர் என்கிறோம். தொடர் இரு வகைப்படும் அவை 1.தொகைநிலைத்தொடர் 2.தொகாநிலைத் தொடர். தொகைநிலைத்தொடர் - தொக்குதல் என்ற மறைதல் என்று பொருள்படும்.

**"பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை**
**முதலிய பொருளின் அவற்றின் உருபு அவற்றின் உருபு இடை**
**ஒழிய இரண்டு முதலாத் தொடர்ந்து ஒரு**

மொழிபோல் நடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொல்”

– (நன்னூல், நூற்பா : 351)

அதாவது பெயர்ச் சொல்லோடு பெயர்ச்சொல்லும், பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும் சேரும் தொடரில் இடையில் வேற்றுமை உருபுகளோ, வினை, பண்பு, உவமை, உம்மை, அன்மொழி முதலியவற்றின் உருபுகளோ தொக்கி வந்து இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட சொற்கள் ஒரு சொல்போல் நிற்குமானால் அது "தொகைநிலைத்தொடர்” எனப்படும். தொகைநிலைத் தொடர் ஆறு வகைப்படும் என்பதை,

“வேற்றுமைத் தொகையே யுவமத் தொகையே
வினையின் றொகையே பண்பின் றொகையே
யும்மைத் தொகையே யன்மொழித் தொகையென்
றவ்வாறென்ப தொகைமொழி நிலையே” – [சொல். எச்சவியல். நூற். 16]

“வேற்றுமை வினைபண்பு உவமை உம்மை
அன்மொழி எனஅத் தொகைஆறு ஆகும்” – [நன்னூல், நூற்பா : 362]

என்று குறிப்பிடுகின்றது. வேற்றுமை முதலான அறுவகைத் தொகைமொழிகளும் தொகை எனப் பெயர் பெற்றமைக்குக் காரணங்கூறுகையில் உரையாசிரியர்களின் கொள்கையில் வேறுபாடு உடையதைத் தொகுத்து ஆய்தல் இன்றியமையா தன்மையுடையதாகின்றது. “வேற்றுமையுருபு தொக்கு நின்ற தொகை” என்பது இளம்பூரணர் கருத்து. உருபுகள் தொகாமல் வெளிப்படையாக வருவது தொகாநிலைத்தொடர் என்பதை,

முற்று ஈரெச்சம் எழுவாய், விளிப்பொருள்
ஆறு உறுப்பு இடை உரி அடுக்கு தொகாநிலை – [நன்னூல், நூற்பா : 374]

குறிப்பிடுகின்றது. தொகாநிலைத்தொடர் ஒன்பதிலும் உருபு மறையாமல் வெளிப்படும்.

**வழு**

ஒரு மொழியின் வளர்ச்சிக்கும் வளமைக்கும் அம்மொழியின் இலக்கண அமைப்புகளே இன்றியமையாத காரணிகளாக அமைகின்றன. தொல்காப்பியாரின் தொலைநோக்குப் பார்வையில் மொழியைப் பிழையின்றி எழுதவும் பேசவும் வழு (குற்றம்) இருத்தல் கூடாது எனத் தமிழ் வாழ வழி வகுத்துத் தந்துள்ளார். அதனை நன்னூலாரும் சிறப்புற விளக்கியுள்ளமை தமிழ்மொழிக்கு வளமை எனலாம். மனிதர்கள் உணர்ச்சி வசப்பட்டுப் பேசும்போது பேச்சில் பல வழு ஏற்படும். இதுவே முறையாக ஒரு மனநிலையில் தெளிவாகச் சிந்தித்துப் பேசினால் வழு ஏற்படாது வழாநிலையில் பேசுதல் வேண்டும்.

வழு என்பதைத் தவறு (தக்கயாக. 7) “எழு உறழ் திணி தோள் வழு இன்று மலைந்தோர், வாழ கண்டன்றும் இலமே” (புறம். 61- 15, 17), கேடு (சூடா.), “பாவம். வழுவாய் மருங்கிற் கழுவாயுமுள (புறம். 34), பழிப்புரை. வழுவெனம்பாரேன் (சிலம்.

16, 69) என இலக்கியங்கள் வழு என்பதற்கு விளக்கமளிக்கின்றன. அதாவது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து நிற்பது தொடர் ஆகும். அச்சொற்கள் தொடருமிடத்து முடிக்கப்படும் சொற்களோடு முடிக்கும் சொற்கள் மாறுபடாமல் (குற்றமில்லாமல்) நிற்பதே இலக்கண முறையாகும். இது வழாநிலை (GRAMMATICAL EXPRESSIONS) எனப்பெறும். சொற்கள் மாறுபட்டு நிற்பது வழு (DEVIATION) எனக் கூறப்படும். வழுவாயினும் முன்னோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை வழுவமைதி (SANCTIONED DEVIATION) ஆகும்."

> திணையே பால் இடம் பொழுது வினா இறை
> மரபாம் ஏழும் மயங்கினாம் வழுவே – [நன்னூல், நூற்பா : 375]

என்றும்

> ஐயம் திணை பால் அவ்வப் பொதுவினும்
> மெய்தெரி பொருள்மேல் அன்மையும் விளம்புப" – [நன்னூல், நூற்பா : 376]

என்றும்

> உயர்திணை தொடர்ந்த பொருள்முதல் ஆறும்
> அதனொடு சாரத்தின் அத்திணை முடிபின" – [நன்னூல், நூற்பா : 377]

| எண் | வகை | வழுநிலை | வழாநிலை |
|---|---|---|---|
| 1. | திணை | பாபு வந்தது | பாபு வந்தான் |
| 2. | பால் | சித்ரா வந்தான் | சித்ரா வந்தாள் |
| 3. | இடம் | நீ வந்தான் | நீ வந்தாய் |
| 4. | காலம் | நாளை வந்தேன் | நாளை வருவான் |
| 5. | வினா | ஒரு எழுதுகோலைக் காண்பித்துச் சிறியதா? பெரியதா? என வினவுதல் | இரு எழுதுகோலைக் காண்பித்து எது பெரியது? என வினவுதல் |
| 6. | விடை | புத்தகம் வாங்கி வருவாயா ? என்னும் வினாவிற்குக் கடலை விலை அதிகம் என விடை கூறுதல் | புத்தகம் வாங்கி வருவேன் என சரியாக விடை அளிப்பது |
| 7. | மரபு | தென்னந்தோட்டம் | தென்னந்தோப்பு |

இவ்வாறு வழு, வழா என்ற வகைகளையும் வழுவமைதியையும் பொதுவியலில் பொதுத்தன்மை மாறாது உலகுக்கு எடுத்துரைத்துள்ள இலக்கணப்பாங்கு போற்றத்தக்கது.

**வினா - விடை**

ஒரு செய்தியைப் பற்றி அறிந்து கொள்வதற்கு ஒருவரை ஒருவர் வினவுதல் இயல்பு. இவ்வாறு வினவுதல் வினா என்றும் வினாவிற்கு ஏற்ப விடையளிப்பதும் இயல்பு.

இதனை வினா கேட்கும் விதங்களையும் விடையளிக்கும் விதங்களையும் இலக்கண நூலாசிரியர்கள் வகைப்படுத்தியுள்ளமையை,

**அறிவு அறியாமை ஐயுறல் கொளல் கொடை**
**ஏவல் தரும்வினா ஆறும் இழுக்கார் – (நன்னூல், நூற்பா : 385)**

எனறு வினவப்படும் வினாக்கள் ஆறு என்றும், வினவிய வினாவிற்கு மறுமொழி கூறுதல் விடை அல்லது செப்பு எனப்படும். செப்பு என்ற தமிழ்ச் சொல் 'உத்தரம்' எனும் வட சொல்லுக்கு இணையானது. வினாயப் பொருளுக்கு விடை தருவதே 'உத்தரம்' என்பது வடநூலார் கருத்து. 'செப்பு என்பது வினாய பொருளை அறிவுறுப்பது' எனச் செப்பையும், 'வினாவானது அறியலுறவை வெளிப்படுத்துவது' என வினாவையும் சேனாவரையர் வரையறுக்கிறார். வினா இன்றியும் செப்பு அமையும் என்பதால், 'வினாயப் பொருளை அறிவுறுப்பது என்ற வரையறை செப்பிற்கு எவ்வாறு பொருந்துகிறது' என்பதற்கு இரண்டு காரணங்களைச் சேனாவரையர் கூறுகிறார்.

விடைகூறும் விதமானது, 1. செவ்வன இறை 2. இறை பயப்பது என இருவகைப்படும். செவ்வன் இறை என்பது நேராக விடை தருவது. இறை பயப்பது என்பது விடையைக் குறிப்பால் தருவது ஆகும். இந்த விடைகளை,

**சுட்டு மறைநேர் ஏவல் வினாதல்**
**உற்ற துரைத்தல் உறுவது கூறல்**
**இனமொழி எனும் எண் இறையுள் இறுதி**
**நிலவிய ஐந்தும் அப்பொருண்மையின் நேர்ப – (நன்னூல், நூற்பா : 386)**

என்று எட்டுவகை விடைகள் இருப்பதாகக் குறிப்பிடுகிறார். இவற்றில் முதல் மூன்று விடைகளும் வெளிப்படையாக விடையளித்தல் என்றும் இறுதி ஐந்தும் விடைகளும் பொருளைக் குறிப்பால் தெரிவிக்குமாறு அமையும். ஆக நேர்விடை மூன்று. குறிப்பு விடை ஐந்தாகும்.

**அடுக்குத்தொடர்**

ஒரு கருத்தை உணர்ச்சிவயப்பட்டு ஆணித்தரமாகச் சொல்லவும், பதற்றத்தை வெளிப்படுத்தவும், அச்சம் மேம்படும்போதும் எனப் பல்வேறு நிலைகளில் ஒரே சொல்லைத் திரும்பத் திரும்பச் சொல்வது மனித இயல்பு. இவ்விதம் சொற்கள் பயன்படுத்துவதை அடுக்குத்தொடர் என்று குறிப்பிடுகின்றனர். இவற்றில் ஒரேசொல் இரட்டித்தல், இரண்டிற்கும் மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து இரட்டித்து வருவதோடு சொல்லின் பகுதியும் இரட்டிப்பது உண்டு.

இவற்றைப்போலவே சொற்பொருண்மை இரட்டிப்பதும் உண்டு. ஒரே பொருள் தரும் இரு சொற்கள் ஒன்றிணைந்து வரும். அச்சொற்கள் பிரிவின்றி தொடர்ந்து வந்தால் அது மீமிசைச் சொல் எனப்படும். இதனை,

"ஒருபொரு ளிருசொல் பிரிவில வரையார்" – [தொ. எச்சவியல் : 64]

என வருவதை எடுத்துக்காட்டாக மிச்சம் மீதி, சரிநிகர்சமானம், , புத்தம்புதிது, நட்டநடு, பச்சைப்பசேல் ஆகிய சொற்களைச் சுட்டலாம். அடுக்குத்தொடரை யாப்பியலார் அடுக்கை இரட்டைத் தொடை எனக் கூறுவர். அணியியலார் அடுக்கைச் சொற்பின்வருநிலையணி என்று கூறுவர். சொற்கள் அடுக்கி வருதலை,

அசைநிலை பொருள்நிலை இசைநிறைக்கு ஒரு சொல்
இரண்டு மூன்றுநான்கு எல்லைமுறை அடுக்கும் – [நன்னூல், நூற்பா : 395]

என்று அசைநிலையில் இருமுறை அடுக்கி வரும் என்றும் பொருள் நிலையில் (விரைவு, வெகுளி, உவகை, அச்சம், துன்பம்) இருமுறை, மும்முறை அடுக்கி வரும். இசைநிறையில் இரண்டு முன்று நான்கு முறை அடுக்கி வரும் நன்னூலார் குறிப்பிடுகின்றார்.

**தொகுப்புரை**

நன்னூலில் சொல் இலக்கணத்தில் மூன்றாவது இயலான பொதுவியல் முன் உள்ள இரண்டு இயல்களிலும் பின் உள்ள இரண்டு இயல்களிலும் இடம்பெறாத எச்சிய செய்திகளைக் கொண்டு நடுவுநிலையில் சிங்கமுகநோக்காக ஆராயப்பட்டுள்ள விதத்தை இக்கட்டுரை ஆய்ந்துள்ளது.

**துணைநின்ற நூல்கள்**

1. நன்னூல்
2. தொல்காப்பியம்
3. புறநானூறு
4. கலித்தொகை
5. தமிழகராதி
6. திருக்குறள்
7. Google.com

★★★★★